# நாரம்மல பிரதேச சபை
# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நாரம்மல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாரம்மல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவை முத்திரைக் கட்டணமாக ரூபா 9,225,843 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பெறவேண்டிய உள்ளபடியான முத்திரைக் கட்டணம் ரூபா 13,838,047 ஆனமையினால் மீளாய்வாண்டின் இறுதியில்

கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,612,204 தொகை குறைத்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் மீதி அந்த நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 27,781,772 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 25,783,457 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 1,998,315 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய கப் வாகனம் பழுதுபார்த்தலுக்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியிருந்த ரூபா 1,500,000 தொகை மீளாய்வாண்டிற்குரிய கடன்பட்டோராக அல்லது செலவினக் கணக்கில் மானியமாகக் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,049,279 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,181,622 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,551 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

ஆசிய அபிவிருத்தி கடன் செயற்திட்டத்தின் கீழ் சபையினால் 2010 - 2011 ஆம் ஆண்டுகளின் போது பெறப்பட்ட ரூபா 28.6 மில்லியன் தொகையான கடன் பணத்தில் வீதியொன்றை நிர்மாணிப்பதற்கும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு

செய்வதற்கும் செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக வருடாந்த கடன் தவணைப்பணம் மற்றும் வட்டியாக ரூபா 44 இலட்சம் தொகை மற்றும் இயந்திரத்திற்கான எரிபொருள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 3,914,259 தொகை மற்றும் ரூபா 2,425,285 தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இயந்திரத்தை வாடகைக்கு வழங்கி ரூபா 3,160,104 தொகையான வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன் தவணை மற்றும் வட்டிக் கொடுப்பனவிற்காக அதன் கீழ் உழைக்கப்பட்ட வருமானம் போதியளவாக இல்லாத நிலைமை எழுந்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 4,375 | 3,736 | 1,310 |
| (ii) | வாடகை | 15,820 | 15,820 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,690 | 1,690 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 39,486 | 39,486 | - |

### 2.3.2 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சுற்றுலாச் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்களிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த ஹோட்டல்களின் அல்லது சிற்றுண்டிச் சாலைகளின் விற்பனைப் புரள்வின் அடிப்படையில் 1 சதவீதத்திற்கு விஞ்சாத கட்டணம் அறவிடவேண்டியிருந்த போதிலும் சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் அவ்வாறு இனங்காணப்பட்ட 2 ஹோட்டல்கள் காணப்பட்டதுடன் அதற்காக ரூபா 3,000 வியாபார வரிக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் 12 கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் காலரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு சபை அதிகாரப்பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களை இனங்காணுதல் மற்றும் அதற்குரிய செயன்முறைக் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றின் அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் காலரீதியான மெய்மையாய்வு செய்யப்பட்டு அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்வதற்கோ அல்லது நிறுத்தி வைக்கும் இடங்களை முறைமைப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் இறுதிவரையில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைக்கும் 22 இடங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டு 65 முச்சக்கர வண்டிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தன.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 971,212 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 9,225,843 ஆகவும் இருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) ரூபா 580,260 பெறுமதியான டெக்ரர் ஒன்று 5 வருடகாலத்திலிருந்து உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 275,500 தொகை செலவில் கொங்கிரீட் சிறு கற்கள் உற்பத்தி செய்யும் 2 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2011 ஒக்தோபர் தொடக்கம் சிறுகற்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. திரும்பவும் 2011 திசெம்பர் மாதம் ரூபா 135,000 தொகை செலவில் கொங்கிரீட் கற்கள் உற்பத்தி செய்யும் 2 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் உற்பத்தி நடவடிக்கைகளும் 2012 பெப்ரவரி தொடக்கம் நிறுத்தப்பட்டிருந்தது.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) றுக் ரோபன நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 50,000 தொகையும் வைத்திய அமர்வுகளை நடாத்துவதற்காக ரூபா 50,000 தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிதியேற்பாடுகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மூன்று செலவின விடயங்களின் கீழ் பாதீட்டின் பிரகாரம் ரூபா 147,111,000 தொகையான செலவினத்தைச் செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதில் 43 சதவீதமான ரூபா 62,866,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முதலில் காணப்பட்ட அலவ்வ பிரதேச சபை, அலவ்வ மற்றும் நாரம்மல என இரண்டு பிரதேச சபைகளாக நியமிக்கும் போது 2011 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 7,059,762 தொகை ஓய்வூதிய பணிக்கொடை நிதியத்தின் ஒன்றிணைந்த மீதியாகக் காணப்பட்டதுடன் உரிய பகிர்ந்தளித்தல் இன்றி அலவ்வ பிரதேச சபைக்கு மொத்தப் பெறுமதியும் கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது உள்ளகக் கணக்காய்வு மற்றும் 01 முகாமைத்துவக் குழுக்கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஈ) விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ரூபா 1,300,000 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 1,570,476 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் வரையிலும் வேலை முடிவடைந்திருந்த தம்பதெனிய கரப்பந்து விளையாட்டு மைதானம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் சபையினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (வற்) ரூபா 913,750 தொகை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) ரூபா 196,607 தொகையாக இருந்த போதிலும் முறையே ரூபா 1,595,295 தொகை மற்றும் ரூபா 284,347 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து மேலதிகமாக ரூபா 769,285 தொகையான வரித்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) ஆசிய அபிவிருத்தி கடன் உதவியின் கீழ் 2010 - 2012 ஆம் ஆண்டு காலத்தில் ரூபா 46,307,441 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தம்பதெனிய - பொத்துப்பிட்டிய வீதிக்காக கொடுப்பனவு செய்யும் போது வேலைகளுக்குரிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக ஒப்பந்தக்கார நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 4,080,168 தொகை சபையினால் செலுத்த வேண்டிய வரித்தொகை கணிப்பீடு செய்யும் போது அவகாசமளிக்கக் கூடிய கழிப்பனவுகளின் கீழ் ஈடுசெய்யப்படாமையின் காரணமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 4,080,168 தொகையான வரித்தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டியேற்பட்டது.

## 2.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளை அகற்றுவதற்காக சபைக்குச் சொந்தமான எலியாதெனிய காணியில் 2 ஏக்கர் அளவிலான காணி ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அது வன விலங்குகளின் நடமாட்டத்திற்கு உட்பட்டிருந்தது. ரூபா 5,627,428 தொகை செலவிட்டு கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 10 மெட்ரிக் தொன் அளவிலான கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்